In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.CC.2/2021
Deposition of P.W.5
****

Name திருமதி.செல்வி

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of March 2024.

**A2, A3 present. A1, A4 absent. Petition u/s 317 CrPC is filed and allowed.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி இருப்பு பாதை காவல் வட்டத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2015ம் ஆண்டு முறப்பநாடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 14.04.2015 அன்று முறப்பநாடு காவல் நிலைய குற்ற எண்.124/2015 u/s.294(பி), 353, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act வழக்கின் எதிரிகள் சங்கர், கணேசன் ஆகியோரை காலை 08.30 மணிக்கு பக்கப்பட்டியில் இருந்து ஆழிக்குடி செல்லும் சுடலை கோவில் அருகே வைத்து கைது செய்து விசாரித்த போது எதிரி சங்கர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சண்முகவேல், விக்டர் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் தன்னை பற்றியும், தனது நண்பர்கள் ரவி, சுரேஷ், ஜெரால்டு ஆகியோருடன் சேர்ந்து 02.01.2015ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் பக்கப்பட்டியில் உள்ள transformer ல் இருந்து 30 மீட்டர் நீள செம்பு கம்பிகளை தனது நண்பர்களுடன் சேர்ந்து களவு செய்து ரூ.1000/-ற்கு இனம் தெரியாத நபரிடம் விற்று அதை பங்கிட்டு செலவு செய்துவிட்டதாகவும் கூறினார். அதன்பின்பு 08.01.2015 அன்று பழைய ஆற்று பாலத்தின் மீது போடப்பட்டிருந்த BSNL-ன் சுமார் 100 மீட்டர் கேபிள் வயர்களை திருடி ரூ.8,000/-ற்கு விற்கு தலைக்கு ரூ.2,000/- வீதம் பிரித்து செலவு செய்ததாகவும் கூறினார். அதன் பின்பு எதிரியை முறப்பநாடு காவல் நிலைய குற்ற எண்.124/2015 வழக்கில் நீதிமன்ற

காவலுக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது, எங்கு வைத்து பிரதி எடுக்கப்பட்டது என நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் மடிக்கணினியில் தட்டச்சு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் சாட்சியாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி சங்கர் என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> - இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

Sd/-M.Selvam,
**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**